நாள் -04.10.2021

O.S.No.276/2013

வா.சா. 2 (வேலுதாஸ் ) அழைக்கப்பட்டு 4ம் பிரதிவாதி தரப்பு கு.வி

வா.சா.1 அரசன்விளை என்ற ஊரை சார்ந்தவர் என்றால் சரிதான். ஒரு நாட்டில் மாநிலங்களை உருவாக்கும் அதிகாரம்யாரிடம் உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியாது. மேலும் மாவட்டங்களை உருவாக்கும் அதிகாரம் யாருக்கு உள்ளது என்ற விபரம் தெரியாது. மேலும் மாவட்டத்தில் உள்ள ஊர்களின் உருவாக்குவதும் அதற்கு பெயர்களை யார் உருவாக்குவது என்றால் நிலஅளவையர் குறிப்புகளின் அடிப்படையில். நில அளவை மட்டும் எல்கை சட்டத்தின் கீழ் ஊர்களை உருவாக்குவர் நிலஅளவையருக்கு அதிகாரம் உள்ளது என்பதினை காண்பிக்க மறுஅளைவை வரைப்படம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நிலஅளவை மற்றும்எ ல்கை சட்டத்தின் கீழ் நிலத்தினை அளக்கவும், எல்கையினை நிர்ணயிக்கவும் மட்டும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல ஊர் பெயர் உருவாககவும் ஊர் பெயர் சூட்டவும் அதிகாரம் உள்ளது. நிலஅளவை மற்றும்எ ல்கை சட்டத்தின் கீழ் ஊர் பெயர் உருவாக்க அதிகாரம் கிடையாது என்றால் சரியல்ல. நிலஅளவை மற்றும்எ ல்கை சட்டத்தின் கீழ் நிலஅளைவயருக்கு ஊர் உருவாகக எந்த சட்டபிரிவும் இல்லை எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. மொத்தம் 5 புல எண் கொண்ட நிலங்கள் தான் அரசன்விளை என்று குறிப்பிடுகிறோம். மேற்படி 5 சர்வே எண் கொண்ட நிலத்தின்

விஸ்தீரணம் எவ்வளவு என்று எனக்கு தெரியாது. மேலும் மேற்படி புல எண் புரயிடங்கள் மற்றும் ஊர் பெயர் பற்றிய விபரம் எனக்கு தெரியாது. மேற்படி 5 புல எண் நிலங்களுக்கும் அரசன்விளை என்று பெயரிடவேண்டும் என்று பஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதா என்ற விபரம் எனக்கு தெரியாது. மேற்படி 5 புல எண் நிலங்களுக்கும் அரசன்விளை என்று பெயரிடவேண்டும் என்று மாவட்ட ஆட்சிதலைவரும் பரிந்துரைத்துள்ளாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. தமிழ்நாடு அரசிடமிருந்து மேற்படி 5 புல எண்களுக்கும் அரசன்விளை என்று பெயர் இடவேண்டும் என்ற உத்தரவு ஏதேனும் உள்ளதா என்றால் அரசாணை எதுவும் பிறப்பிக்கப்படவில்லை. அரசன்விளை என்று பல நூறு வருடங்களாக அழைக்கப்பட்டு வருகிறது என்கிறதினை காண்பிக்க திருவாங்கூர் சமாஸ்தானத்தில் காண்பிக்க ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. ஒரு ஊரை குறிப்பிட கால கட்டத்திற்கு ஓர் பெயர்கொண்டு அழைத்தால் அதன் அடிப்படையில் அந்த ஊரிற்கு அப்பெயரை சூட்டலாம் என்று காண்பிக்க எந்த ஆவணமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. பஞ்சாயதில் வழங்கப்பட்ட ரசீதுகள் தறவதலாக அரசன்விளை ஊர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றாலும் ஆகவே மேற்படி ரசீதுகளின் அடிப்படையில் அரசன்விளை என்று அழைக்கப்படகூடாது என்றால் சரியல்ல. மேலும் பஞ்சாத்தில் மேற்படி ஊரினை அரசன்விளை என்று அழைக்க தீர்மானம் ஏதேனும் நிறைவேற்றப்பட்டிருந்தால் அது செல்லதக்கதல்ல என்று மாவட்ட ஆட்சிதலைவர்ஆணை பிறப்பித்துள்ளார் என்றால்

அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. 2003ஆண்டில் ஹகன் தீப்சிங் பேடி மாவட்ட ஆட்சிதலைவராக கன்னியாகுமரி மாவட்டத்தில் பணி புரிந்தபோது மேற்படி புல எண் கொண்ட நிலங்களை பேயோடு என்று அழைக்க ஆணைப்பிறப்பிதிருந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் பிறப்பிக்கப்பட்டிருந்து ஆணை பார்வையிட்ட பின்புதான் இவ்வழக்கினை தாக்கல் செய்திருந்தோம் என்றால் சரியல்ல. மேற்படி உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த வழக்கிலும் ஹகன்தீப் சிங் பேடி தாக்கல் செய்த அறிக்கை உள்ளது என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் பிறப்பித்த ஆணையினை நான் பார்வையிட்டுள்ளேன். மேற்படி உயர்நீதிமன்றத்தின் ஆணையில் உள்ளாட்சி மற்றும் பங்சாயத்து பிறப்பித்த தீர்மானங்களும் உத்தரவுகளும் செல்லதக்கதல்ல என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2002 மற்றும் 2003 ம் ஆண்டில் அப்போதிருந்த கரன்தீப்சிங் பேடி என்ற பெயரில் இருந்த மாவட்ட ஆட்சி தலைவர் மேற்படி ஊரை பேயோடு என்று தான் அழைக்கவேண்டும் என்று ஆணை பிறப்பித்தார் என்றால் அதுப்றி எதரியாது,. பொதுவாக ஒரு ஊரின் பெயரை மாற்ற வேண்டும், அல்லது புதியதாக பெயர் சூட்டவேண்டும் என்றாலும் பஞ்சாயத்தில் தீர்மானம் நிறைவேற்று அதினை மாவட்ட ஆட்சிதலைவரிடம் கொடுத்து அதன் அடிப்படையில் தான் பெயர் மாற்றம் செய்யமுடியும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேலும் மேற்படி 5 புல எண் கொண்ட நிலங்களுக்கு அரன்விளை என்று பெயர் மாற்றம் செய்தற்கு பஞ்சாத்து தீர்மானமோ, மாவட்ட ஆட்சி தலைவர் அனுமதி

அல்லது மாநில அரசாங்கத்தின் அரசாணை இல்லை என்றால் சரியல்ல. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள வரி ரசீதுதோ, அல்லது உரிமங்கள் நகல்களோ ஊரின் பெயரை நிர்ணயம் செய்ய முடியாது என்ற ஆட்சி தலைவர் ஆணையை நான் படித்து பார்க்கவில்லை. மேலும் மாண்பு மிகு உர்நீதிமன்றத்தில் பிறப்பித்த ஆ ணையில் உள்ள விபரத்தினை வழக்கறிஞர் கூறி நான் அறிந்துள்ளேன். மேற்படி மாண்பு மிகு உயர்நீதிமன்ற ஆணையிலும் நிலஅளவை மற்றும் எல்கை சட்டதின் கீழ் ஊரின் பெயர் மாற்றப்பட்டிருப்பின் அது செல்ல தக்கதல்ல என்று குறிப்பிடடுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. மேலசங்கரன் குழி பிளாக் எண்ணிற்கு உட்டபட்டது தான் அரசன்விளை ஊர் என்றால் சரிதான். உயர்நீதிமன்றத்தில் அரசாணையில் அரசன்விளை என்ற ஊர் கிடையாது என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி வழக்கில் நாங்கள் கட்சி சேர்க்கப்படாததல் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. மாண்பு மிகு உயர் நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீட்டு தீர்ப்பு செல்லதக்தல்ல என்று இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அசல் வழக்கில் பிறப்பித்த தீர்ப்பு மற்றும் மாண்பு மிகு உயர்நீதிமன்றத்தில் பிறப்பித்த தீர்ப்பு ஆகிய இரண்டு தீர்ப்புகளும் செல்லதக்கதல்ல என்ற காணரத்திற்காகதான் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி மாண்பு மிகு உயர்நீதிமன்றத்தின் 2வது மேல்முறையீட்டில் பிறப்பித்த தீர்ப்பினை புலபரிசீலனை செய்ய எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் ஆணைக்கு எதிராக உச்சநீதிமன்றத்தில் எந்த மனுவும் தாக்கல்

செய்யவில்லை. மேற்படி 5 புல எண் கொண்ட நிலத்தில் பல மதம் மற்றும் இனத்தினை சார்ந்த நபர் வசித்துவருகிறார் என்றால் சரிதான். மேற்படி 2வது மேல்முறையீடு மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்த சமயத்தில் சாமுவேல் என்பவர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் அரசன்விளை ஊர் சம்பந்தமாக நீதிபேராண்மை மனு தாக்கல் செய்திருந்தார் என்றால் அதுபற்றி தெரியாது. மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் 2வது மேல்முறையீட்டில் பிறப்பித்த தீர்ப்பில் சாமுவேலின் பெயர் மற்றும் முகவரி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தற்போது நியாபகம் இல்லை. இவ்வழக்கில் நாங்கள் கோரியுள்ள பரிகாரங்களை தான் சாமுவேல் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நீதிபேராண்மை மனுவிலும் கோரியிருந்தார் என்றால் அதுபற்றிய விபரம் எனக்கு தெரியாது. மேற்படி நீதிபோராண்மை மனுவில் மாவட்ட ஆட்சி தலைவர் ஸ்தல ஆய்வு செய்து , நபர்களை விசாரித்து முறையான அறிக்கை தாக்கல் செய்ய ஆணைபிறப்பிக்கப்பட்டிருந்தது என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கு 2011 நவம்பர் மாதத்திற்கு பின்பு தான் அரசன்விளை ஊர் சம்பந்தமான விபரம்எனக்கு தெரியும் அதற்கு முன்பு உள்ள விபரம் எனக்கு தெரியாது. 2011 ஆண்டில் வங்கி பெயர் பலகை மற்றும் அரசுதுறையின் பெயர் பலகையில் அரசன்விளை என்ற பெயர் பேயோடு என்று மாற்றப்பட்டதுஎ ன்றால் சரிதான். அதற்கு நாங்கள் எதிர்ப்பு தெரிவித்து மாவட்ட ஆட்சிதலைவர் மற்றும் பஞ்சாயத்திடம் மனு தாக்கல் செய்திருந்தோம். நிலஅளவையர் துறையிடம் பெயர் மாற்றம் செய்தது குறித்து எந்த மனுவும் தாக்கல்செய்யவில்லை.

இவ்வழக்கினை தாக்கல் செய்த காரணத்தினால் நிலஅளவையர் துறையிடம் மனு தாக்கல் செய்யவில்லை. நாங்கள் தாக்கல் செய்த மனுவிற்கு மாவட்ட ஆட்சிதலைவரின் ஆணைப்படி பேயோடு என்று பெயர் மாற்றம் செய்யதாக பதில் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 2002/2003 ஆண்டில் கரன் தீப்சிங் பேடி மாவட்ட ஆட்சிதலைவராக கன்னியாகுமரி மாவட்டத்தில் இருந்தபோது இரண்டு நடவடிகைகள் ஏற்பட்டு அது தற்போதுவரை நிலுவையில்உள்ளது என்றால் தெரியாது, மேற்படி மாவட்ட ஆட்சிதலைவரின் நடிவடிகை செல்ல தக்கதல்ல என்று எந்த மனுவோ, வழக்கோ தாக்கல் செய்யவில்லை. மேலசங்கரன்குழியின் வருவாய் கிராமம் வேம்பனூர். வேம்பனூர் கிராமத்திற்கு உட்பட்ட ஊர்கள் எது எது என்று பட்டியல் உள்ளது. வேம்மபனூர் வருவாய் கிராமத்திற்கு உட்டபட்ட ஊர் பட்டியல் நான் பார்த்தது கிடையாது. வேம்பனூர் நீண்ட கரை அ கிராமத்தில்இருந்து பிரிக்கப்பட்ட கிராம் என்றால் சரிதான். வேம்பனூர் வருவாய் கிராமத்திற்கு உள்ள ஊர் பட்டியலில் அரசன்விளை ஊர் பெயர் துலங்கவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. வருவாய் கிராமங்களுக்கு உட்பட்ட ஊர்கள் எவை என்ற பட்டியல் மாவட்ட ஆட்சிதலைவர் அலுவலகத்தில் பிறப்பிக்கப்பட்டு அரசாணை வெளியிடப்பட்டுள்ளது என்றால் அதனை நான் பார்வையிடவில்லை. மாநிலஅரசன் வெளியீட்டிலும் அரசன்விளை என்ற ஊரின் பெயர் துலங்காது என்றால் தெரியாது. வருவாய் கிராமம் மற்றும் கிராமங்களுக்கு உட்பட்ட ஊர்களின் பெயர் பட்டியல் மாவட்ட ஆட்சிதலைவரின் அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டுவருகிறது என்றால் அதுபற்றி

தெரியாது. சாமுவேல் என்ற நபர் எங்கள் ஊரை சார்ந்தவர் கிடையாது என்று காண்பிக்க கிரா நிர்வாகியிடமோ, அல்லது பஞ்சாயத்திடமோ என்ற சான்னிதழ் தாக்கல் செய்யவில்லை அதற்கு அவசியம் இல்ரைல. ஊர் பெயர் அரசன்விளை என்பது குறித்து ஊர் மக்கள் சார்பாக சாமுவேல் முன்னரே வழக்கு தாக்கல் செய்து அதில் முடிவு எட்டப்பட்டுவிட்டது என்றால் சாயில்ல. ஆகவே புதிதாக தாக்கல்செய்யப்பட்டுள்ள இவ்வழக்கு நிலைக்க தக்கதல்ல என்றால் சரியல்ல. சூரப்பள்ளம் என்ற ஊர் கணபதிபுரம் பஞ்சாத்தினை சார்ந்தது என்றால் சரியல்ல. கணபதிபுரம் பஞ்சாயத்து மேலுசங்கரன்குழி ஆகிய இரண்டு பஞ்சாத்திலும் சூரப்பள்ளம் உள்ளது. கணபதிபுரம் பஞ்சாத்து பட்டியலில் சூரப்பள்ளம் உள்ளது. ஆகவே ஒவ்வொரு பஞ்சர்திலும் எந்தெந்த ஊர் அப்பாஞ்சாத்திற்கு உட்பட்டது என்ற பட்டியல் உள்ளது என்றால் சரிதான். மேலசங்கரன்குழி பஞ்சாயத்திற்கு உட்டபட் ஊர் பட்டியலில் சூரபள்ளம் என்ற ஊர் உள்ளது . மேற்படி பட்டியலை இவ்வழக்கில் தாக்கல் செய்யலாம். மேலும் மேற்படி பட்டியலில் அரசன்விளை என்ற ஊர் உள்ளதுஅந்த பட்டியலை தாக்கல்செய்யலாம். மேலசங்கரன்குழி பஞசாயத்தில் உள்ள ஊர் பெயர் பட்டியலில் அரசன்விளை , சூரபள்ளம் ஊரின் பெயர் துலங்காது என்றால் சரியல்ல. மேற்படி பேயோடு என்ற ஊரில் உள்ள 5 புலஎண் கொண்ட ஊரினை தான் அரசன்விளை என்று குறிப்பிடுகிறோம் என்றால் சரியல்ல. நிலஅளைவ மற்றும் எல்கை சட்டத்தின்கீழ் நிலஅளைவ துறை ஊர் பெயர் குறித்து பிறப்பித்த ஆணை செல்லதக்கதல் என்று

மாவட்ட ஆட்சிதலைவரின் ஆணை உள்ளதுள ன்றால் அதுபற்றி தெரியாது. வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள குடும்ப அட்டை, உரிமம், பஞ்சாத்தில் பெறப்பட் ஆவணம் ஊரின் பெயரை நிர்ணயம் செய்ய செல்ல தக்கதல்ல என்றால் சரியல்ல. முன் வழக்குகளில் இவ்வழக்கில் வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணம் ஊர் பெயரை நிர்ணயம் செய்ய இயலாது என்று முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்றால் மேற்படி வழக்கில் நான் கட்சி சேராததால் அதுபற்றி எனக்கு தெரியாது.

வேண்டுகோளுக்கிணங்க கு.வி தொடர்ச்சிகாக ஒத்திவைக்கப்படுகிறது.